
ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய் ஜெய் ராம்!



# ஸ்ரீ ரமண மகரிஷிகளால்

அருளப்பெற்ற

# உபதேச வுந்தியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. KRishnanthan
Ten
A.H.C.

ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய ஜெய ராம்!

# ஸ்ரீ ரமண மகரிஷிகளால் அருளப்பெற்ற

# உபதேச வுந்தியார்

இந்து நெறிக் கழகம், இடைக்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபதேச வுந்தியார்

## அவதாரிகை

எதனிலுமே இச்சையிலனாய், பரிபூரண மோனமே தன்னிலையாகத் திகழும் ஸ்ரீ ரமண பகவானை, "உபதேச வுந்தியார்" என்னும் மிகவுயர்ந்த, உபதேச நூலைப்பாடி அருளும்படி செய்த பெருமை ஸ்ரீ முருகனாருக்கே உரியதாகும். பெறுதற்கரிய பெருநிதியான இந்த நூலை பகவானைக்கொண்டு, உலகுக்கு அளிக்கச் செய்த பேருபகாரத்திற்கு, ஆஸ்திக உலகம் என்றென்றும் அப்பெரியாருக்கு நன்றிக் கடன் பட்டுள்ளது.

ஸ்ரீ முருகனார் தாம் எழுதிய "ஸ்ரீரமண சந்நிதி முறை" என்ற நூலில், "திருவுந்தியார்" என்னும் பகுதியை எழுதும்போது, 18 புராணங்களில் உள்ள அவதாரங்களனைத்தும், அது தவிர மற்ற எல்லா அவதாரங்களுமே ஸ்ரீபகவானைத் தவிர வேறில்லை என்னும், ஏக பக்தியின் விலாஸத்தைக்காட்டி எழுதி வந்தார்.

பல அவதாரங்களைப் பற்றி எழுதிக்கொண்டே வந்தவர், ஈசுவரனின் லீலைகளை விளக்கிகொண்டு வரும்போது, இறைவனின் அவ்வியாஜ கருணையினால் தாருகாவனத்து ரிஷிகளைத் தடுத்தாட்கொண்ட விவரத்தைக் கூறவிழைந்தார்.

இந்த ரிஷிகளின் "கன்மத்தை யன்றி கடவுளிலை", என்ற செருக்கையும், வன்மத்தமான அகங்காரத்தையும் அழித்து, அவர்களின் கர்வத்தை அடக்கி, அவர்கள் உய்யும் பொருட்டு சிவபிரான் அருளிய உபதேச பாகத்தை எழுத வேண்டிய கட்டத்தில், பகவானை எழுதியருளும்படி வேண்டிக் கொண்டார். முதலில் மௌனமாய் இருந்த பகவான் பிறகு மனமிரங்கி எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளிச்செய்த நூலே இந்த அரியதான "உபதேச வுந்தியா" ராகும். மேலும் பகவான் எழுதியருளிய நூல்களுக்குள், ஒரு முழுமையான நூலாக ஒரே சமயத்தில் பாடியதுமாகும்.

கர்மம், பக்தி, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களையும் தன்னுள் அடக்கி உருவெடுத்ததே இந்த "உபதேச வுந்தியார்". "உந்தியார்" என்னும் பாவினத்தில் பாடியதால் "வுந்தியார்" என்னும் பெயருடன் விளங்குகிறது. மேலும் உந்தி பறத்தல் என்பது மகளிர் விளையாட்டுக்களில் ஒருவகையானதுமாகும்.

ஸ்ரீ பகவான் ரமண மகரிஷிகளால் அருளப்பெற்ற "உபதேச வுந்தியார்" பற்றிய தொடர் சொற்பொழிவு "ஆனந்தசாகரா"வில் 09-04-2002 முதல் 13-04-2002 வரை நிகழவிருக்கிறது. இலங்கை - சின்மயா மிஷன் ஆச்சாரியார் - பிரம்மச்சாரி ரமண சைதன்யா அவர்களால் நடாத்தப்பெற இருக்கும் இச் சொற்பொழிவுகளில் கலந்துகொள்ளும் அடியவர்களுக்கு இது ஒரு கைநூலாக உதவுமெனக் கருதி ஸ்ரீ ரமணாச்சிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி டி.ஆர். கனகம்மாள் அவர்களுடைய பத உரையுடன் சேர்த்து, இந்நூலை - தொடர் சொற்பொழிவுகள் நிகழ உள்ள முதல்நாள் அன்று (09-04-2002) வெளியிட்டு ஸ்ரீ பகவானின் பாதமலர்களில் சமர்ப்பிக்கின்றேன்.

அதிக வேலைகள் கையிலிருந்தாலும் சிரமத்தைப் பொருட்படுத்தாது ஒரு குறுகிய நேரத்தில் இந்நூலை அச்சிட்டு உதவிய பெரியார் திரு. வே. திருநீலகண்டன் (லக்ஷ்மி அச்சகம்) அவர்களுக்கு நன்றி கூறி பகவானின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

"ஆனந்தசாகரா"
42, சிறபறி கார்டன்ஸ்,
கொழும்பு-04.

அ. சீவரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபதேச வுந்தியார் உரை

**கன்மம் பயன்றரல் கர்த்தன தாணையாற்**
**கன்மங் கடவுளோ வுந்தீபற**
**கன்மஞ் சடமதா லுந்தீபற.** 1

### பதவுரை

**கன்மம் பயன்றரல்** - (ஜீவர்களால் செய்யப்படும்) கர்மங்கள் அதனுடைய பலனைத் திருப்பித்தரக் கூடியதானது,

**கர்த்தனது ஆணையால்** - உலகைப் படைத்த கர்த்தாவாகிய கடவுளின் ஆஞ்ஞையின்படியே நிகழும்.

**கன்மம் கடவுளோ?** - செய்கின்ற கர்மமே பலனைத் தருகின்ற கடவுளாக இருக்க முடியுமோ? (ஏனெனில்)

**கன்மம் சடமதால்** - கர்மமானது தானே இயங்கக்கூடிய சக்தி யுடையதல்ல. அது ஜடமானது.

**வினையின் விளைவு விளிவுற்று வித்தாய்**
**வினைக் கடல் வீழ்த்திடு முந்தீபற**
**வீடு தரலிலை யுந்தீபற.** 2

### பதவுரை

**வினையின் விளைவு** - (செய்த கர்மத்திற்கு ஏற்றவாறு சுகதுக்க வடிவமான) நல்வினை தீவினைகளின் பலன்கள்.

**விளிவுற்று வித்தாய்** - அனுபவிப்பதனால் அழிந்து நாசமடைந்தாலும்,. வாசனா ரூபமான விதை வடிவமாக நின்று, மீண்டும கர்மத்தில் பிரவிருத்தியை யுண்டாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினைக்கடல் வீழ்த்திடும்** - பிறவிக்கடலாகிய சம்சாரத்தில் மீண்டும் மீண்டும் விழும்படி செய்திடுமேயன்றி,

**வீடு தரல் இலை** - விடுதலையாகிய மோக்ஷவீட்டை அடையச் செய்யாது.

**கருத்தனுக் காக்குநிட் காமிய கன்மங்**
**கருத்தைத் திருத்திய ஃ துந்தீபற**
**கதிவழி காண்பிக்கு முந்தீபற.** 3

பதவுரை

**கருத்தனுக்கு ஆக்கும்** - ஈசுவரார்ப்பணமாகச் செய்யப்படும்

**நிட்காமிய கன்மம்** - பலனில் இச்சையில்லாமல் நிட்காமியமாகச் செய்யும் கர்மங்கள்

**கருத்தை திருத்தி ய..்.து** - மனத்தின் அழுக்கை நீக்கி சித்த சுத்தியைக் கொடுத்து, அந்த கருமமானது,

**கதி வழி காண்பிக்கும்** - மோக்ஷவீட்டை அடைவதற்கான நேர் வழியை உணரும்படி காண்பிக்கும்.

**திடமிது பூசை செபமுந் தியான**
**முடல்வாக் குளத்தொழி லுந்தீபற**
**வுயர்வாகு மொன்றிலொன் றுந்தீபற.** 4

பதவுரை

**உடல் வாக்கு உளத் தொழில்** - (முன் பாட்டில் சொல்லப்பட்ட நிட்காமியமான) உடலாலும், வாக்காலும் மனத்தாலும் செய்யப்படும் கிரியைகளான (முறையே)

**பூசை செபமும் தியானம்** - பூஜையும் ஜபமும் தியானமும் ஆகிய நல்கர்மங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயர்வாகும் ஒன்றில் ஒன்று** - ஒன்றைக் காட்டிலும் ஒன்று சிறந்த சாதனமாகும்.

**திடமிது** - திடமான முடிவு இதுவேயாகும். இதைவிடச் சிறந்தது வேறில்லை.

**எண்ணுரு யாவு மிறையுரு வாமென**
**வெண்ணி வழிபட லுந்தீபற**
**வீசனந் பூசனை யுந்தீபற. 5**

பதவுரை

**எண் உரு யாவும்** - (மண், நீர், நெருப்பு, காற்று, வானம், சந்திரன், சூரியன், ஜீவன் என்று விளங்கும்) அஷ்ட மூர்த்தங்களாகிய பிரபஞ்ச தோற்றத்தின் உருவம் யாவும்

**இறை உருவாம் என** - இறைவனின் உருவமேயென்று

**எண்ணி வழிபடல்** - மனதினால் நினைத்து அவற்றை அன்புடன் வழிபட்டு நிற்பது

**ஈசனற் பூசனை** - இறைவனுக்குச் செய்யும் நல்ல வழிபாடாகிய மிக உயர்ந்த பூஜையாகும்.

**வழுத்தலில் வாக்குச்ச வாய்க்குட் செபத்தில்**
**விழுப்பமா மானத முந்தீபற**
**விளம்புந் தியானமி துந்தீபற. 6**

பதவுரை

**வழுத்தலில் வாக்கு உச்ச** - இறைவனைப் போற்றித் துதி செய்வதிலும் ஜபம் மேலானது. அதிலும் உரத்த குரலில் ஜபம செய்வதைவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாய்க்குள் செபத்தில்** - வாய்க்குள்ளேயே ஜெபம் செய்வதானது மேலாகும்

**விழுப்பமாம் மானதம்** - மனத்தினால் ஜெபிப்பது அதனிலும் மேலான சிறப்புடையதாகும்.

**விளம்பும் தியானம் இது** - இதுவே தியானம் என்று சொல்லப் படுகிறது.

**விட்டுக் கருதலி னாறுநெய் வீழ்ச்சி போல்**
**விட்டிடா துன்னலே யுந்தீபற**
**விசேடமா முன்னவே யுந்தீபற.** 7

பதவுரை

**விட்டுக் கருதலின்** - (மற்ற எண்ணங்கள் குறுக்கிடுவதனால்) விட்டு விட்டு செய்யப்படும் தியானத்தை விட

**ஆறு நெய் வீழ்ச்சிபோல்** - ஆற்றின் நீரோட்டம் போலவும், நெய்யின் வீழ்ச்சியைப் போலவும் (நெய்யின் தாரையைப் போல)

**விட்டிடாது உன்னலே** - இடைவெளியில்லாமல் இறைவனை நினைப்பதே

**விசேடமாம் உன்னவே** - தியானத்திலேயே விசேஷமானதாகும்.

**அனியபா வத்தி னவனக மாகு**
**மனனிய பாவமே யுந்தீபற**
**வனைத்தினு முத்தம முந்தீபற.** 8

பதவுரை

**அனிய பாவத்தின்** - (தியானிக்கப்படும் இறைவன்) தனக்கு வேறாக அன்னியமானவர் என்று மனதில் பாவிப்பதைக் காட்டிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவன் அகம் ஆகும்** - (தனக்குள்) அவனே நான் என்று பாவிக்கப்படும்

**அனனிய பாவமே** - அனன்னிய பாவமே (தனக்கு அன்னியமற்று தானாகவே விளங்குபவர் என்ற பாவமே)

**அனைத்தினும் உத்தமம்** - (தியானிக்கும் பாவங்கள்) யாவற்றிலும் மிக உயர்ந்ததும் சிறந்ததுமான பாவனையாகும்.

**பாவ பலத்தினாற் பாவனா தீதசற்**
**பாவத் திருத்தலே யுந்தீபற**
**பரபத்தி தத்துவ முந்தீபற.** 9

பதவுரை

**பாவ பலத்தினால்** - (யாதாவதொரு) பாவத்தை பாவித்துப் பழகிய பலத்தினால்

**பாவனாதீத** - பாவிப்பதற்கு எட்டாத (பாவனை கடந்த)

**சற்பாவத்து இருத்தலே** - கேவலம் 'இருக்கிறேன்' என்னும் இருப்பு உணர்வுடன் மட்டும் இருப்பதே (நிற்பதே)

**பரபக்தி தத்துவம்** - இறைவனை அடைவதற்கான வழிபாட்டின் உண்மை நிலையாகும்

**உதித்த விடத்தி லொடுங்கி யிருத்த**
**லது கன்மம் பத்தியு முந்தீபற**
**வது யோக ஞானமு முந்தீபற.** 10

பதவுரை

**உதித்த இடத்தில்** - "நான்" என்று உதிக்குமிடமாகிய ஆன்மாவில்

**ஒடுங்கி இருத்தல்** - (மீண்டும் எழாமல்) ஒடுங்கியிருப்பதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அது கன்மம் பத்தியும்** - அப்படியிருத்தலே கர்மயோகமும் பக்தியோகமுமாகிய இரண்டின் முடிவாகும்.

**அது யோக ஞானமும்** - அதுவே ராஜயோக ஞானயோகங்களின் முடிவான உண்மையுமாகும்.

**வளியுள் ளடக்க வலைபடு புட்போ**
**லுளமு மொடுங்குறு முந்தீபற**
**வொடுக்க வுபாயமி துந்தீபற. 11**

பதவுரை

**வளி உள் அடக்க** - பிராணனை (கும்பகத்தால்) உள்ளே அடக்குவதால்

**வலைபடு புட்போல்** - வலைக்குள் அகப்படும் பறவையைப் போல

**உளமும் ஒடுங்குறும்** - மனமும் தன்னிருப்பிடத்தில் ஒடுங்கிவிடும்

**ஒடக்க உபாயம் இது** - (யோக முறையினால்) மனதை ஒடுக்கு வதற்கு இது ஒரு உபாயமாகும்.

**உளமு முயிரு முணர்வுஞ் செயலு**
**முளவாங் கிளையிரண் டுந்தீபற**
**வொன்றவற் றின்மூல முந்தீபற. 12**

பதவுரை

**உளமும் உயிரும்** - மனமும் பிராணனுமாகிய இவையிரண்டும்

**உணர்வும் செயலும்** - முறையே ஒன்று நினைப்பும், மற்றொன்று செய்கையுமாய்

**உளவாம் கிளை இரண்டு** - இருக்கின்றதான இரண்டு கிளைகளாகும்

**ஒன்று அவற்றின் மூலம்** - இவையிரண்டின் பிறப்பிடமாகிய மூலம் ஒன்றேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலயமு நாச மிரண்டா மொடுக்க
மிலயித் துளதெழு முந்தீபற
வெழாதுரு மாய்ந்ததே லுந்தீபற. 13

பதவுரை

**இலயமு நாசம்** - மனத்தின் அடக்கமானது மனோலயம் மனோ நாசம் என்று

**ஒடுக்கம் இரண்டாம்** - ஒடுக்கும் முறையானது இரண்டு வகைப்படும்

**இலயித்து உளது எழும்** - இலயத்தினால் அடங்கிய மனம் மீண்டும் எழுந்துவிடும்.

**உருமாய்ந்த தேல் எழாது** - மனதின் உரு நாசமடைந்தால் மீண்டும் என்றும் எ்ழாது

ஒடுக்க வளியை யொடுங்கு முளத்தை
விடுக்கவே யோர்வழி யுந்தீபற
வீயு மதனுரு வுந்தீபற. 14

பதவுரை

**ஒடுக்க வளியை** - (பிராணாயாமத்தினால்) பிராணனை அடக்குவதால்

**ஒடுங்கும் உளத்தை** - (அதன் காரணமாய்) ஒடுங்கியிருக்கும் மனத்தை

**ஓர் வழி விடுக்கவே** - தன்னையுணரும் ஒரே நாட்டமாகிய ஏகாக்கிர வழியில் செலுத்தினால்

**வீயும் அதன் உரு** - அந்த மனதின் உருவமானது வீழ்ச்சியடைந்து நாசமடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவுரு மாயமெய்ம் மன்னுமா யோகி
தனக்கோர் செயலிலை யுந்தீபற
தன்னியல் சார்ந்தன னுந்தீபற. 15

பதவுரை

**மனவுரு மாய** - மனத்தின் உருவும் நாசமடைந்து

**மெய்ம் மன்னும் மாயோகி** - மெய்ப்பொருளில் தானாக நிலையுற்ற அந்த புகழ்பெற்ற மகாயோகி (தனக்கு)

**தனக்கு ஓர் செயலிலை** - தனக்கென்று வேறெந்த ஓர் செயலும் அவசியமில்லை.

**தன்னியல் சார்ந்தனன்** - (ஏனெனில்) தனது சுபாவமாகிய ஆன்ம நிலையை அடையப்பெற்றான்.

வெளிவிட யங்களை விட்டு மனந்தன்
னொளியுரு வோர்தலே யுந்தீபற
வுண்மை யுணர்ச்சியா முந்தீபற. 16

பதவுரை

**மனம் வெளிவிடயங்களை விட்டு** - மனமானது பஞ்சேந்திரியங்களின் வழியாக பிரபஞ்ச வெளி விஷயங்களை அறிவதை விட்டு

**தன் ஒளியுரு ஓர்தலே** - தன்னுடைய அறிவின் (ஆத்ம) ஒளி எங்கிருந்து வருகிறதென்று ஆராய்ந்தறிதலே

**உண்மை உணர்ச்சியாம்** - யதார்த்தமான உண்மை உணர்வின் ஞானமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தி னுருவை மறவா துசாவ
மனமென வொன்றிலை யுந்தீபற
மார்க்கநே ரார்க்குமி துந்தீபற. 17

பதவுரை

**மனத்தின் உருவை** - மனதின் உருவமாவது எதுவென்று

**மறவாது உசாவ** - மறக்காமல் இடைவிடாமல் விசாரித்தால்

**மனம் என ஒன்றில்லை** - (தனி முதலாக) மனமென்று ஒரு பொருளில்லையென்று தெரியவரும்.

**ஆர்க்கும் இது நேர் மார்க்கம்** - இதுவே யாவருக்கும் நேரான வழியாகும். (முக்தியடைவதற்கான நேர்மார்க்கமுமாகும்)

எண்ணங்களே மனம் யாவினு நானெனு
மெண்ணமே மூலமா முந்தீபற
யானா மனமென லுந்தீபற. 18

பதவுரை

**எண்ணங்களே மனம்** - மனமென்று சொல்லப்படுவது எண்ணங்களின் தொகுப்பேயாகும்.

**யாவினும் நான் என்னும்** - இந்த எண்ணங்கள் யாவற்றிலும் இத்தேகம் நானென்று செயல்படும்.

**எண்ணமே மூலமாம்** - (இந்த) எண்ணமே முதலானதும் மூலமாயுள்ளதுமாகும்.

**நான் ஆம் எனல் மனம்** - (இந்த தேகத்தை) நானென்று அபிமானிக்கும் எண்ணமே மனமெனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நானென் றெழுமிட மேதென நாடவுண்**
**ணான்றலை சாய்ந்திடு முந்தீபற**
**ஞான விசாரந் துந்தீபற.** 19

பதவுரை

**நான் என்று எழு இடம்** - "நான்" என்றயிந்தயெண்ணம் உதிக்கின்ற இடமானது

**ஏது என உள் நாட** - எதுவென்று (எங்கிருந்தென்று) தனக்குள்ளே நாடி தேடிச்சென்றால்

**நான் தலை சாய்ந்திடும்** - "நான்" என்னும் எண்ணமெழாமல் தலைசாய்ந்து மாய்ந்து விடும்

**இது ஞான விசாரம்** - இதுவே ஞானவிசாரமாகும், (ஞானமடைவதற்குரிய விசாரமார்க்கமாகும்)

**நானொன்று தானத்து நானானென் றொன்றது**
**தானாகத் தோன்றுமே யுந்தீபற**
**தானது பூன்றமா முந்தீபற.** 20

பதவுரை

**நான் ஒன்று தானத்து** - நானென்னும் அகந்தையின்யெண்ணம் இரண்டற ஒன்றுபட்டுவொடுங்கும் ஸ்தானத்தில்

**நான் நான் என்ற ஒன்று அது** - "நான், நான்" என்ற போதத்துடன் கூடிய ஓர் இருப்புணர்வான அந்த வஸ்து

**தானாகத் தோன்றுமே** - (எந்த விதமான) முயற்சியின்றித்தானாகவே பிரகாசிப்பது தோன்றும்

**அதுதான் பூன்றமாம்** - (தன்னியல்பாகவே பிரகாசிக்கும்) அதுதான் பரிபூரணமான பரவஸ்துவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானென்னுஞ் சொற்பொரு ளாமது நாளுமே
நானற்ற தூக்கத்து முந்தீபற
நமதின்மை நீக்கத்தா லுந்தீபற. 21

பதவுரை

**நான் என்னும் சொற்பொருள்** - நானென்று சொல்லும் சொல்லின் உண்மைப் பொருளானது

**நாளும் அது ஆம்** - எக்காலத்தும் எல்லா அவஸ்தைகளிலும் மாறாத "அது" என்று பேசப்படும் பொருள், சத்தியப் பொருளாகிய பூரண வஸ்துவே. (ஏனெனில்)

**நான் அற்ற தூக்கத்தும்** - நானென்ற அகந்தையுணர்வு ஒடுங்கிய தூக்கத்திலும்

**நமது இன்மை நீக்கத்தால்** - நாமில்லாமற்போனோம் என்ற உணர்வு இல்லாததினால் (இருந்து கொண்டே யிருப்பதினால்)

உடல்பொறி யுள்ள முயிரிரு ளெல்லாஞ்
சடமசத் தானதா லுந்தீபற
சத்தான நானல்ல வுந்தீபற. 22

பதவுரை

**உடல் பொறி உள்ளம்** - ஸ்தூலதேகம், பொறிபுலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய இந்திரியங்கள், மனம்

**உயிர் இருள் எல்லாம்** - பிராணன் அகந்தை முதலான இவை யெல்லாம்.

**ஜடம் அசத்து ஆனதால்** - சுயமான அறிவோ இருப்போ அற்ற ஜடமானவைகள் ஆனதினால்

**சத்தான நான் அல்ல** - (அவைகள் யாதொன்றும்) சத்தாகிய உண்மையிருப்பான நான் அல்ல. (ஆன்மா அல்ல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள துணர வுணர்வுவே றின்மையி
னுள்ள துணர்வாகு முந்தீபற
வுணர்வேநா மாயுள முந்தீபற. 23

பதவுரை

**உள்ளது உணர** - என்றும் உள்ளதாகிய அந்த வஸ்துவை உணர்வதற்கு

**உணர்வு வேறு இன்மையின்** - (அந்த வஸ்துவுக்கு வேறாக) உணரக் கூடிய வேறொரு அறிவு இல்லாததினால்

**உள்ளது உணர்வாகும்** - அந்த உள்ள வஸ்துவே, தன்னைத் தானே விளக்கக்கூடிய சித்சொரூபப் பிரகாசமாகவும் இருக்கிறது (விளங்குகிறது)

**உணர்வே நாமாய் உளம்** - அந்த உணர்வாக விளங்கும் சித்தே நாமாகயிருக்கிறோம். (சத்தாக இருப்பாக விளங்குகிறோம்)

இருக்கு மியற்கையா லீசசீ வர்க
ளொருபொரு ளேயாவ ருந்தீபற
வுபாதி யுணர்வேவே றுந்தீபற. 24

பதவுரை

**இருக்கும் இயற்கையால்** - உண்மை சொரூபமான சத்சித்தாகவுள்ள சுபாவமான இயல்பாகிய நிலையில்

**ஈச சீவர்கள்** - இறைவனாகிய ஈசுவரனும், அவனால் படைக்கப்பட்ட ஜீவர்களும்

**ஒரு பொருளே யாவர்** - உள்ள பொருளாகிய ஒரே பொருளே யாவார்கள் (ஒரே பரவஸ்துவே யாவர்)

**உபாதி உணர்வே வேறு** - ஆனால் உபாதி உணர்வானது வேறு பட்டதாகும். (இறைவன் சர்வஞ்ஞன், ஜீவன் கிஞ்சிஞ்ஞன் ஈசன் சர்வ சக்திமான், ஜீவன் அசக்தன் என்ற வுபாதி உணர்வு வேறு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை யுபாதிவிட் டோர்வது தானீசன்
றன்னை யுணர்வதா முந்தீபற
தானா யொளிர்வதா லுந்தீபற. 25

பதவுரை

**தன்னை உபாதி விட்டு** - தனது நாம ரூப தோற்றத்தை நீக்கி விட்டு (தனது யதார்த்தமான உண்மையை)

**ஓர்வது தான்** - உணர்ந்து அறிந்து கொள்ளுவது தான்

**ஈசன் தன்னை உணர்வதாம்** - இறைவன் தன்னை உண்மையாக உள்ளபடி உணர்வதாகும். (ஏனெனில்)

**தானாய் ஒளிர்வதால்** - நமது சொரூபமாகவே நாமாகவே கடவுள் நமக்குள் பிரகாசித்துக் கொண்டிருப்பதால்.

தானா யிருத்தலே தன்னை யறிதலாந்
தானிரண் டற்றதா லுந்தீபற
தன்மய நிட்டையீ துந்தீபற. 26

பதவுரை

**தானாய் இருத்தலே** - (தான் இது, தான் அது, என்று உணராமல்) தான் தானாகயிருப்பதே

**தன்னை அறிதலாம்** - தன்னிருப்பின் உண்மையை உணர்ந்து அறிந்ததாகும்

**தான் இரண்டு அற்றதால்** - தானென்னும் உண்மைப்பொருள் இரண்டாக இல்லாததினால் (இருப்பவன், அந்தயிருப்பை அறிபவனென்று இரண்டு பொருள்களில்லையாதலால்)

**தன்மய நிட்டை ஈது** - இதுவே தன்மயமான ஆத்ம நிஷ்டையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவறி யாமையு மற்ற வறிவே
யறிவாகு முண்மையீ தூந்தீபற
வறிவதற் கொன்றிலை யுந்தீபற. 27

பதவுரை

**அறிவு அறியாமையும்** - ஒன்றையறிகிறேன் அல்லது ஒன்றை அறியவில்லை யென்ற

**அற்ற அறிவே** - இருமையான உணர்வேயில்லாத, இருப்பு மாத்திரமாக "இருக்கின்றேன்" என்ற மெய்யறிவே

**ஈது உண்மை அறிவாகும்** - இதுவே பரமார்த்தமான உண்மை அறிவாகும். சிற்சொரூபமான ஆத்மஞானமாகும்.

**அறிவதற்கு ஒன்றில்லை** - அறிந்து கொள்ளுவதற்கு தனக் கன்னியமாக வேறொன்றுமேயில்லை.

தனாதியல் யாதெனத் தான்றெரி கிற்பின்
னனாதி யனந்தசத் தூந்தீபற
வகண்ட சிதானந்த முந்தீபற. 28

பதவுரை

**தனாது இயல்யாது என** - தன்னுடைய இயல்பான (யதார்த்தமான) நிலையானது எது? எப்படிப்பட்டதென்று

**தான்தெரிகிற் பின்** - சந்தேகமற நிச்சயமாக தான் தெரிந்து கொண்டால், பிறகு

**அனாதி அனந்த சத்து** - தொடக்க மற்றதும் முடிவற்றதுமான, அறிவுருவமாகிய உண்மை சொரூபமே

**அகண்ட சிதானந்தம்** - இடைவெளியில்லாத எங்கும் நிறைந்த ஆனந்த பரிபூரணமாகும் (பிரம்மேயாகும்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்த வீடற்ற பரசுக முற்றவா
றிந்த நிலைநிற்ற லுந்தீபற
விறைபணி நிற்றலா முந்தீபற. 29

### பதவுரை

**பந்த வீடு அற்ற** - பந்தத்தில் கட்டுப்பட்டிருக்கிறேன் அல்லது விடுதலையடைந்து விட்டேனென்ற இருமை உணர்வற்ற

**பரசுகம் உற்றவாறு** - பரமாத்தும சுகமான ஆனந்த நிலையடைந்து

**இந்த நிலை நிற்றல்** - இந்த பரமான நிலையில் நழுவாமல் நிற்பதே

**இறைபணி நிற்றல்** - இறைவன் பணித்தபடி அனுஷ்டித்து நிற்ப தாகும்.

யானற் றியல்வது தேரி னெதுவது
தானற் றவமென்றா னுந்தீபற
தானாம் ரமணேச னுந்தீபற. 30

### பதவுரை

**யான் அற்று இயல்வது** - நானென்னும் அகந்தை முற்று மொழிந்து இயல்பாயுள்ள ஆத்மவஸ்துவான அதை

**தேரின் எது அது தான்** - நன்றாகத் தெரிந்து கொள்ளுவதெதுவோ, அதுதான்

**நற்தவம் என்றான்** - நல்ல உத்க்ருஷ்டமாகிய சிரேஷ்டமான தபசு என்று அருள்கின்றான்,

**தானாம் ரமணேசன்** - தனதியல்பான பரமாத்ம சொரூபமாய் விளங்கும் பகவான் ரமணாசாரியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வெளியீடு:-

"ஆனந்தசாகரா"
இல.42, சிறபறி கார்டன்ஸ்,
பம்பலப்பிட்டி, கொழும்பு 04.

Printed by: **Luxmi Printer** - 195, Wolfendhal Street, Colombo-13. Tel: 448545, 458273, 473533 Fax: 330588

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org